#காலிங்கராயர்வாய்கால்_சிதம்பரம்நடராஜர்

சாத்தந்தை கூட்டத்துக்கு நாயகன் காலிங்கராயர் அன்று பள்ளத்தில் இருந்து மேட்டிற்கு பாயும் தண்ணீர் தொழிட்நுட்பத்தை தான் சிதம்பரம் நடராஜர் கோவிலிலும் செய்திருக்கிறார்கள் நடராஜரின் ஆசியில் காலிங்கராயரின் புகழையும் உலகறிய செய்வோம்❤️❤️

40 ஏக்கர் பரப்பளவு கொண்ட சிதம்பரம் நடராஜர் திருக்கோவிலில் இடுப்பளவு தேங்கிநின்ற மழை நீர் அனைத்தும் ஒரே நாளில் வடிந்த அதிசயம்!

உலகிலேயே பள்ளத்தில் இருந்து மேட்டிற்கு பாயும் வாய்க்கால் என்ற ஒன்று உண்டென்றால் அது எங்கள் ஈரோட்டில் அதுவும் எங்கள் வீட்டிற்கு மிகஅருகில் உள்ள காலிங்கராயன் வாய்க்காலாகும்.

பாம்புபோல் நெளிந்த வாய்க்கால் பனைமர உச்சிக்கே பாயும் என்ற நம் முன்னோர் வாக்குப்படி கி பி 13 ம் நூற்றாண்டில் நஞ்சையன் என்ற கொங்கு வேளாளருக்கு மகனாகப் பிறந்த காலிங்கராயன் அவர்கள் தன் நாடான பூந்துறை வளம் பெற பள்ளமான பவானியில் இருந்து மேடான நொய்யல் வரை 91 கிலோமீட்டர்களுக்கு பாம்புபோல
நெளிந்துநெளிந்து வாய்க்கால் வெட்டியுள்ளார்.

வாய்க்கால் புறப்படும் இடத்தில் இருந்து தண்ணீர் முதல் நெளிவில் மோதியதும் உடனே வேகத்துடன் திரும்பி அடுத்த நெளிவை நோக்கி பாயும், பிறகு அந்த நெளிவில் மோதிய அதே வேகத்தில் திரும்பி அடுத்த நெளிவிற்கு சென்று மோதும், உடனே அதே வேகத்துடன் திரும்பி அடுத்த நெளிவு இப்படியே மோட்டார் எதுவும் இன்றி 91 கிலோமீட்டர் தூரமும் பள்ளத்தில் இருந்து மேட்டிற்கு நெளிந்துநெளிந்து S TURN எடுத்துஎடுத்து
இந்த காலிங்கராயன் வாய்க்கால் தான் பாயும் 91 கிலோமீட்டர் தூரமும் நெல் மஞ்சள் கரும்பு வாழை தென்னை என 700 வருடங்கள் கடந்து இன்றும் வளப்படுத்திச் செல்கின்றது.

காலிங்கராயன் அவர்கள் தன் சொந்த நிதியில் இருந்து
இந்த வாய்க்காலை வெட்டி முடித்ததும் தன் பங்காளிகளான கொங்கு வேளாளர் சமூகத்தின் சாத்தந்தை குலத்தவர் யாரும் இந்த வாய்க்கால் நீரை பயன்படுத்திவிடக்கூடாது என்று வாய்க்கால் கரையோரம் இருந்த தன் பங்காளிகள் அனைவரையும் இந்த வாய்க்கால் நீரை பயன்படுத்தவே முடியாத தூரத்திற்கு சென்று குடியமர்த்தியதுடன் தானும்
இந்த வாய்க்கால் நீரை பயன்படுத்திவிடக்கூடாது என்று பொள்ளாச்சி அருகில் உள்ள ஊத்துக்குளிக்கு சென்று குடியேறிவிட்டார்.

தேசிய தன்னார்வலர்கள் தினத்தில் கொங்கு நாட்டின் முதல் தன்னார்வலர் காலிங்கராயன் அவர்களைப் பற்றி தெரியாதவர்களுக்கு அவரை அறிமுகம் செய்ய கிடைத்த இந்த சந்தர்ப்பம் இறைவனின் அருளே தவிர வேறில்லை.

சிதம்பரம் நடராஜர் கோவிலிலும் காலிங்கராயன் அவர்களின் இதே பாம்புநெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டப்பட்ட சுரங்க வடிகால் வாய்க்காலால் பள்ளமான கோவிலில் தேங்கி இருந்த இடுப்பளவு தண்ணீர் அனைத்தும் ஒரே நாளில் மேடான பகுதியில் இருக்கும் குளத்திற்கு சென்றுவிட்டது.

